## 106. நம்முடைய தேவனையே

பல்லவி

நம்முடைய தேவனையே
கீர்த்தனை பண்ணிடுவோமே
துதித்தலே இன்பமானது
அது எத்தனை ஏற்றது - (2)

சரணங்கள்

1. எருசலேமை கட்டும் கர்த்தரோ
துரத்துண்டவர்களை சேர்க்கிறார்
இருதயம் நொருங்குண்டவருக்கு
குணமாக்கி ஆறுதல் அளிக்கின்றார்
- நம்முடைய

2. நட்சத்திரங்களின் கூட்டத்தை
எண்ணி பேரிட்டு அழைக்கிறார்
கர்த்தரோ மகா வல்லவர்
அவரின் அறிவு பெரியது
- நம்முடைய

3. வானத்தை மேகங்களால் மூடி
பூமிக்கு மழையை அனுப்புகிறார்
மலைகளில் புல்லை முளைப்பிக்கிற
கர்த்தரை துதியுடன் பாடிடுங்கள்
- நம்முடைய